548

Registered No. M. 1368

ஓம்

தருமசீலன்.

R

30 JUL 192

பத்திராதிபர்: தி. ஆதிநயினார்.

புத்தகம் 6. } உருத்திரோற்காரிஹு ஆனிமீ 1923-ஹு ஜூன்மீ { சஞ்சிகை 3.

விஷய சூசிகை.

	விஷயம்.	பக்கம்.
1.	நீதிச் செய்யுட் சிந்தாமணி	... 49
2.	சான்றோ ரென்கை யீன்றோர்க் கழகு	... 50
3.	நற்சுகக் கண்ணி	... 51
4.	தக்ஷிண மஹாராஷ்ட்ர ஜைன சபை	... 52
5.	ஜைன எஜ்யுகேஷன் பண்ட் அசோசியேஷன், மைசூர் நைமித்திகாதி லேசனம்	... 54
6.	இரகு வம்சம்	... 55
7.	பக்தி	... 61
8.	கல்வி	... 62
9.	தகவுரை (மேருமந்தா புராணம்)	... 65
10.	நாவல் (இரகஸ்யபுரி மர்மம்)	... 70

வருஷசந்தா ரூபா 1.] 1923. [தனிப்பிரதி அணா 0-2-0

DHARMASEELAN PRESS. MADRAS

தருமசீலன் விளம்பரம்.

இது, ஒவ்வொரு தமிழ் மாதந்தோறும் வெளிவரும். இதில், பொது நீதிகள், சங்கமருவிய நூல்களில் வெளிவராதநூல்கள், அறிவை விருத்தி செய்யத்தக்கபல நீதிகள், வியாசங்கள், பலவிநோதக் கதைகள், நாவல்கள், பொது வர்த்தமானங்கள்முதலிய பல அரிய விஷயங்கள் பிரசுரிக்கப்படும்.

சந்தா விவரம்.

வருஷம் 1-க்குத் தபாற்செலவு உட்பட இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய விடங்களுக்கு ரூபா 1—0—0

பினங், சிங்கப்பூர், தென் ஆப்பிரிக்கா முதலிய விடங்களுக்கு ரூபா 1—4—0; தனிச் சஞ்சிகை விலை அணா 0—2—0.

கவனிப்பு.

1. சந்தாதாராகச் சேருகிறவர்கள் தங்கள் முழுவிலாசத்தையும் சுத்தமாக எழுதியனுப்ப வேண்டும்.

2. முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகை பெற்றுக்கொள்ள வேண்டும்; ஒரு வருஷத்துக்குக் குறைந்து பத்திரிகை கொடுக்க முடியாது; ஒரு வருஷத்துக்கிடையில் சந்தாதாரர்கள் சேர்ந்தால் அவர்களுக்கு முந்தின மாதங்களின் சஞ்சிகைகளும் சேர்த்தனுப்பப்படும்.

3. சந்தாதாரர்கள் கடிதமெழுதினால் தங்கள் சந்தா நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும்.

4. இப்பத்திரிகைக்கு விஷயதானஞ்செய்வோர் கடிதத்தில் ஒரே பக்கத்தில் சுத்தமாக எழுதியனுப்பவேண்டும்; தூஷணையான விஷயங்களை எழுதலாகாது; பொது நன்மையான விஷயங்களே எழுதவேண்டும்; விஷயங்களைத் திருத்திக்கூட்டவும் குறைக்கவும் நமக்குப்பாத்தியமுண்டு; வியாசக்காரர் அபிப்பிராயங்கள் நம்மைச் சார்ந்தவைகளல்ல; விஷயதானஞ் செய்வோர் தங்கள் முழு விலாசத்தையும் எழுதவேண்டும்.

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு ஒருமாதத்திற்கு	ரூபா	10—0—0
அரைப்பக்கத்திற்கு	ரூபா	6—0—0
கால் பக்கத்திற்கு	ரூபா	3—0—0

விளம்பரத்தொகையை முன்பணமாகவே அனுப்பவேண்டும்.

தி. ஆதிநயினர், "தருமசீலன்" ஆபீஸ்.
26. ஆச்சாரப்பன் தெரு, ஜார்ஜ்டவுன், சென்னை.

ஓம்

தருமசீலன்.

“ அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.”

(All Rights Reserved.)

புத்தகம் 6	உருத்திரோற்காரிஸு ஆனிமீ 1923ஸு சூன்மீ	சஞ்சிகை 3.

நீதிச் செய்யுட் சிந்தாமணி.

பிறவிக்குவித்தான செய்கைகள்.

“ வீடு வேண்டி விழுச்சடை நீட்டன் மெய்ம்
மூடு கூறையின் மூடுதல் வெண்டலை
யோடு கோட லுடுத்தலென் றின்னவை
பீடி லாப்பிற விக்குவித் தென்பவே.”

(இ-ள்.) “மோக்ஷத்தை விரும்பிப் பெரிய சடையை வளர்த்தல், தேகத்தை மூடுகின்ற சீவர வஸ்திரத்தினுல் மூடுதல், வெண்மையாகிய தலையோட்டை (கபாலத்தை)க் கையிலேந்துதல், ஏகாங்கிதரித்தல் என்று கூறிய இத்தன்மையான செய்கைகள் பெருமையில்லாத பிறப்பிற்கு வித்தென்று, தத்துவ முணர்ந்தோர் கூறுவார்கள்” என்பதாம்.

(வி-ரை.) முத்தியடைய விரும்புவோர், அகப்பற்று, புறப்பற்றுக்களை யொழித்துத் தவமியற்றி யோகசாதனை செய்தால் மாத்திரமே மோக்ஷத்தை யடைவர். சடை வளர்த்தல் முதலிய வெளி வேடங்களில் விருப்பம் வைத்தால் அவ்விருப்பம் அவற்றில் புத்தியை இழுத்துப் பற்றுளத்தை யுண்டாக்கிவிடும்; அப்பற்றினுல் பிறவிக்கேது வுண்டாகும், ஆதலின், இவ்வெளி வேடங்களைத் தாங்குவார்க்கு மோக்ஷம் கைகூடுதல் அரிதாம். தவத்தில் மன மொடுங்குதற்கு ஆரம்பத்தில் இத்தகைய சில கிரியைகள் அவசியமெனினும், தொடக்கத்தில் இவற்றை அனுஷ்டித்து மனமொடுங்குதற்கான மார்க்கங்களைத் தேடிக்கொண்டே போய்த் தவமுதிர்ந்த நிலையில் இவற்றையு மொழித்து விடல்வேண்டும். எல்லாவற்றையும் விட்ட நிலையே மோக்ஷமாம். இவ்வுண்மை யறியாத சிலர், இவ்வெளி வேடங்களே மோக்ஷத்தைத் தரக்கூடியன வென்று நினைத்து இவற்றிலேயே புத்தியைச் செலுத்திக் கொண்டிருந்து பிறவிக்காளாவர்; அத்தகையினர்க் கறிவுறுத்தற் பொருட்டே இச்செய்கைகளைப் பயனற்றனவென்று கூறினர் பெரியோர். இதனுல் அவற்றை முற்றும் பழித்ததாகக் கொள்ளலாகாது. இது, மனைவியரோடு வெளிவேடந் தாங்கித்துறவு பூண்டு காட்டியிருந்த சில போலித்தவசிகளுக் கறிவுறுத்தும் பொருட்டுச் சீவகன் கூறியது. விழு-சிறப்பு; அஃதிங்கே பெருமையை யுணர்த்தி நின்றது. சீவரம்-துவராடை; காவிவஸ்திரம். ஏகாங்கி-தேகமுழுவதும் அணியப்படும் ஒரே சட்டை. பீடு-பெருமை.

(சீவகசிந்தாமணி. 1427)

தருமசீலன்.

உருத்திரோற்காரி௵ ஆனி௴.

"சான்றோ ரென்கை யீன்றோர்க் கழகு"

இதன் பொருள்:—"சான்றோர் என்கை-(பிள்ளைகளைக் கல்வி கேள்விகளில்) நிறைந்தோர் என்று உலகத்தார் சொல்லிப் புகழ்வது, ஈன்றோர்க்கு-அவர்களைப்பெற்ற தாய் தந்தையர்க்கு, அழகு-அழகாகும்," என்பதாம்.

தாய் தந்தையர்க்குப் பிள்ளைகளாகப் பிறந்தவர்கள் நற்கல்விகளைக் கற்று நல்லொழுக்க முடையவரா யிருத்தல்வேண்டும்; அங்ஙனமிருப்பின், உலகத்தார் அவர்களைப் பார்த்து, "இவர்கள் சிறந்த புத்திமான்கள்; இவர்களைப் பெற்றதாய் தந்தையர் நல்ல தவஞ் செய்தவர்களாவார்கள்" என்று அவர்களையும், அவர்களைப் பெற்றோர்களையும் புகழ்வார்கள். அதனால் அப்பிள்ளைகளைப் பெற்றார்க்கு மிகுந்த சிறப்புண்டாகும். இங்ஙனமாதற்குத் தாய்தந்தையரும் பிள்ளைகளைக் கல்வி பயிலச்செய்து நல்வழியில் நடக்கச் செய்யவேண்டும்; அப்பிள்ளைகளும் கல்விகற்று நன்னெறியில் நடக்கவேண்டும். பிள்ளைகள் கல்வியறி வொழுக்கங்களிற் சிறந்து வரக்கூடிய வர்களாயிருப்பினும் தாய் தந்தையர் அவர்களை அவற்றிற் புகுத்தாவிடின் அதனாலேயே அவர்கள் சிறப்பில்லாதவராய் விடுவார்கள். தாய் தந்தையர்கள், பிள்ளைகளைக் கல்வியறி வொழுக்கங்களிற் புகுத்தக் கூடியவர்களா யிருந்தாலும் அக்குழந்தைகள் துர்ப்புத்தி யுடையவர்களா யிருந்தால் அவர்கட்கு ஒருவகைச் சிறப்புமிராது. ஆதலின், இருவகையாரும் நன்னெறியிற் சிரத்தையுடையவர்களா யிருந்தால் மாத்திரமே இருவகையார்க்கும் சிறப்புண்டாகும். இதுபற்றியே திருக்குறளாசிரியரும்,

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்"

"தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது."

"மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்"

"தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

என்று கூறியருளினர். இந்நீதிகளைப் படித்துணராக் காரணத்தாலேயே இக்காலத்தில் சில பெற்றோர்கள், பிள்ளைகளுக்குக் கல்வியறி வொழுக்கங்களை இளமையிலேயே கற்றுக் கொடுக்காமல் அவர்களைச் செல்வம் பாராட்டி வளர்த்து இஷ்டம்போல் தீ நெறிகளிற் புகவிட்டுப் பின்னர் வயது வந்தபின் அவர்களால் அடியும் உதையுங்கூடப் பட்டுக் குடும்பவாழ்க்கை கெட்டு அவஸ்தைக்குள்ளாகின்றார்கள். சில பிள்ளைகளும், தங்கள் தாய்தந்தையர் தங்களுக்குக் கல்வி யறிவுகளைக் கற்றுக்கொடுக்க எவ்வளவு பிரயாசைப்படினும் தங்கள் துர்க்குணம் நீங்காமல் கெட்ட வழிகளிற் பிரவேசித்துத் தாய் தந்தையர்க்குத் துன்பத்தை உண்டாக்குகிறார்கள். இவ்விருவகையினும் பிள்ளைகள் கெடுவரேனும் பெரும்பான்மையும் தந்தை தாயர் பிள்ளைகளைக் கவனிக்காத குறையினாலேயே கெடுவார்கள். தாய்தந்தையர் இளமையிலேயே தக்க பிரயாசையெடுத்துக்கொண்டால் கெட்ட பிள்ளைகளையும் நல்ல பிள்ளைகளாக்கி விடலாம். அப்பிரயாசையினாலும் சீர்ப்படாமல் போகும் பிள்ளைகள் சிலரேயாவர். ஆதலின், பெற்றோரும் பிள்ளைகளும் இந்நீதியைக் கடைப்பிடித் தொழுகிச் சீரும் சிறப்பு முறுவார்களாக.

(திருவருட்சகாயம்.)

நற்சுகக் கண்ணி.

1. எப்பொருட்கு மாதி யிறைவன் பதத்துணையை
முப்பொழுதும் போற்ற முயல்வார்க்கு நற்சுகமே.

2. நற்கலைகள் கற்றறிந்த நானிலத்தி லேயறிவோர்
சொற்புத்தி கேட்கத் துணிவார்க்கு நற்சுகமே.

3. எந்த வுயிர்க்கு மிடுக்கண் புரியாமல்
சிந்தை மகிழ்நலஞ் செய்வார்க்கு நற்சுகமே.

4. பொல்லாத கோபமதைப் போக்கியே சாந்தமுற்ற
நல்லார்க்கு மேதினியில் நண்ணிவரும் நற்சுகமே

5. பொய்யும் புரட்டும் புகலாம லேயொழித்து
மெய்யே புகல்கின்ற வித்தகர்க்கு நற்சுகமே.

210451

6. தற்பெருமை பேசாமல் சான்ரோ ருரைக்கின்ற
சொற்படியே செய்வோர்க்குத் துன்பமில்லை நற்சுகமே.

7. மோசங்கள் செய்து முழுநிந்தை தேடாமல்
நேசமிகுஞ் சத்தியத்தி னிலைப்பார்க்கு நற்சுகமே.

செம்பைக் கிழார்.

தக்ஷிண மஹாராஷ்ட்ர ஜைன சபை.

பம்பாய் மாகாணத்தைச்சேர்ந்த தென்மஹாராஷ்ட்ர தேசத்திலுள்ள ஜைனர்கள் 25 வருஷங்களுக்கு முன் அநேக கஷ்டங்களையும் நிஷ்டூரங்களையும், தக்க அந்தஸ்துள்ளவர்களின் மனஸ்தாபங்களையும் பொருட்படுத்தாது "தக்ஷிண மஹாராஷ்ட்ர ஜைன ஸபை" என்ற ஒரு ஸபையை ஸ்தாபித்தார்கள். இந்த 25 வருஷங்களுக்குள் அந்த ஸபையின் நிர்வாகஸ்தர்கள் செய்திருக்கும் வேலைகள் மிகவும் ஸ்தோத்திரார்ஹமானது. அந்த ஸபையின் ஆதரவில் புனா, ஸாங்கலி, கொல்லாபுரம், பெல்காம், ஹூப்பள்ளி, தார்வாட், முதலான விடங்களில் போர்டிங்குகள் ஸ்தாபித்து இதுவரையில் சுமார் 500, 600, பிள்ளைகளுக்கு அச்சபையார் கல்வி கற்பித்திருக்கிறார்கள். 20 வருஷங்களுக்கு முன் 5, 6 வித்தியார்த்திகளில்லாத தேசத்தில் இப்போது 500, 600 பெயர்களிருப்பது ஸாமான்ய விஷயமல்ல.

இதுதவிர, உயர்தரப் படிப்புக்காக அவர்கள் அநேக பிள்ளைகளை மேல்நாட்டுக்கு அனுப்பி இருக்கிறார்கள். ஷை சபையின் ஆதரவில், மராடி பாக்ஷிக பத்திரிகையும் கன்னட மாஸிக பத்திரிகையும் நடந்தேறி வருகின்றன. இன்னும் அச்சபையினர் பிரதி வருஷமும் ஸபைகூடி ஜைனர்களின் முன்னேற்ற வழிகளைப்பற்றி ஆலோசித்து அவற்றை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதற்கான பிரயத்தினங்களைச் செய்கிறார்கள். உபதேசகர்களை ஏற்படுத்திப் பிரதி கிராமங்களுக்கும் சென்று தர்மோன்னதி, வித்யோன்னதி, தேசோன்னதி இவைகளை அடைவதற்கான உபதேசங்களைப் புரியும்படி செய்கிறார்கள். பால விவாஹம், விருத்த விவாஹம், சுபாசுப காரியங்களில் டாம்பீகத்தைக் கோரிச் செய்யும் வீண் செலவுகள் முதலானவைகளை நிறுத்தி இருக்கிறார்கள். ஜைனர்களுக் குள்ளிருக்கும் உட்பிரிவுகளை நீக்கியும், கட்சிப் பிரதி

கட்சிகளை நீக்கியும் ஒற்றுமைப் படுத்துகிறார்கள். ஷை சபையின் ஆதாவிலிருக்கும் போர்டிங்குகளில் நிரந்தரமாக 200 பிள்ளைகள் கல்வி பெறுவதற்கான வசதிகள் செய்திருக்கிறார்கள். மேற்படி பிள்ளைகளுக்கு மானஸிக, சாரீரிக, நைதிக, தார்மீக சிக்ஷணைகள் கிடைக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். போர்டிங்குகளிலிருக்கும் பிள்ளைகளுக்குச் சாப்பாடு, வைத்தியம் முதலான எல்லா வசதிகளும் ஏற்படுத்தி இருக்கிறார்கள். பிரதி வருஷமும் சுமார் 20,25 ஆயிரம் ரூபாய் இவைகளுக்காகச் செலவாகிறது. ஷை செலவுகளுக்காகத் தார்மீகர்கள் ஏராளமாகப் பணங் கொடுப்பதுந் தவிர, பிடியரிசி, தான்யபண்டு, சுபாசுப வர்த்தனை, டொனேஷன் இவைகளின் மூலமாகவும் பொருள் சேர்க்கிறார்கள்.

இந்த ஸபையின் மூலமாக நமது ஸமூகம் விசேஷ முன்னேற்றத்தை நாளுக்குநாள் அடைந்து கொண்டு வருவதைக் காணும் தனவந்தர்கள் ஷை சபைக்கு மேலும்மேலும் உதாரமனஸினால் தாராளமாகப் பொருளுதவி செய்துகொண்டு வருகிறார்கள். கொல்லாபுரம் பிரஸித்த தார்மீகராகிய ஸ்ரீமான் பூபாலப்பா அண்ணு ஜீரகே அவர்கள் சுமார் 20 ஆயிரம் ரூபாய் இதுவரையில் பல ஸமயங்களில் உதவியிருக்கிறார்கள். இதைப்போலவே பிரதிகிராமத்திலுள்ள தனவந்தர்கள் ஏராளமாகப் பொருள் உதவி இருக்கிறார்கள். இவர்களைத் தவிர நன்தணகி, மடாதிபதிஸ்வஸ்தி ஸ்ரீ ஜிநஸேநஸ்வாமியாரவர்கள் இந்த ஸபையின் முன்னேற்றத்திற்கு அதிக ஊக்கத்துடன் உழைக்கிறார்கள். இது மிகவும் பாராட்டத்தக்கது. இன்னும் இவர்கள், அநேக ஸமயங்களில் ஷை ஸபைத்தலைமையை வகித்துக் கல்வியின் அவசியத்தைப்பற்றியும், அதை அபிவிருத்தி செய்யும் விஷயத்தில் பிரதி ஜைனனும் தனுமன தனங்களால் சகாயஞ்செய்ய வேண்டுமென்பதைப் பற்றியும் அதி கம்பீரமாகவும் கேட்பவர்களுக்கு அதிக உத்ஸாக மேற்பட்டு விசேஷ பொருளுதவி செய்யும் வண்ணமாகவும் போதித்திருக்கிறார்கள். மேலும் தம் மடத்து வருமானத்திலிருந்து ஒரு பாகத்தைப் பிரதி வருஷமும் ஷை சபைக்குக் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். தவிர சென்ற வருஷம் தார்மீக சிக்ஷணைக்காக ரூபா 6000 கொடுத்திருக்கிறார்கள். இவ்வண்ணம் ஷை ஸ்வாமிகள் ஜைன தர்மத்தைப் பரவச் செய்வதற்காகப் பல விதமான ஸகாயம் செய்வது மிகவும் போற்றத் தக்கது.

சிறிது காலத்திற்கு முன் ஸாங்கலியில் ஒரு போர்டிங் கட்டுவதற்காக நாதேபுதே பிரஸித்த ஸ்ரீமான் ராமசந்த தனஜீ அவர்

கள் 20 ஆயிரம் ரூபாய் நன்கொடை யளித்தார்கள். ஸாங்கலி பிர முகர்கள் சேர்ந்து 25 ஆயிரம் ரூபாய் கொடுத்தார்கள். மொத்தம் 45 ஆயிர ரூபா செலவில் அங்கே ஒரு போர்டிங் ஹோம் கட்டி அத ற்கு "ராமசந்த தனஜீ போர்டிங்ஹோம்" என்று பெயரிடப் பட்டி ருக்கிறது. சென்ற 26-11-22ல் தக்ஷண மஹாராஷ்ட்ர ஜைன ஸபையின் 25-வது வருஷக் கொண்டாட்டம் ஸாங்கலியில், ராஜப் பிரதிநிதியின் சட்டசபை மெம்பராகிய ஸ்ரீமான் ப்ரொபஸர் அண்ணா ஸாஹேப் லட்டே M.A. L.L.B. M.L.A. அவர்களின் தலைமையின் கீழ் வெகு சிறப்பாக நடந்தேறியது.

அந்த ஸமயத்தில் மேற்சொன்ன போர்டிங் ஹோமின் திறப்பு விழா பம்பாய் கவர்னர் ஸர்ஜார்ஜ் லாயிட் G. C.I.E. D.S.O. அவர்க ளால் வெகு ஆடம்பரத்துடன் நடைபெற்றது.

ஜைனம் ஜயதி சாஸநம்.

[கன்னட "ஜினவிஜய" பத்திரிகையை அனுஸரித்து ஆரணி C. வசுபால நைனரால் இந்த வியாஸம் எழுதப்பட்டது]

ஜைன எஜ்யுகேஷன் பண்ட் அசோசியேஷன் மைசூர் நைமித்திகாதி லேசனம்.

சாகரம் தாலுக்கா சைனனாட்டு சீமையிலிருக்கும் ஜைன பாந்தவர்கள் வித்யாப்யாசத்திலும் நாகரீகத்திலும் மிகக் குறைந் திருப்பதால் மைசூர் ஜைன எஜ்யுகேஷன் பண்ட் மூலமாகச் சாகரம் தாலுக்கா ஆரிகெபஸ்தியில் மேமீ. 13-14-தேதிகளில், அக்குறை யை நிவர்த்திக்கும் நோக்கமாக ஒரு சபைசேர்ந்தது. அச்சபை யில் சோதேமடம் ஸ்திரீகளும், அந்தப் பக்கத்திலேயே உபதேசம் செய்து கொண்டிருந்த ஸ்ரீ ஸ்ருதசாகர ஸ்வாமிகளும், மைசூர் ஸ்ரீயுத எம். எல். வர்த்தமானய்யா அவர்களும், லக்ஷ்மீபதய்ய பி. ஏ. அவர்களும், சாந்திராஜ ஸாஸ்திரியார் அவர்களும், அந்த நாட்டு அநேக பிரமுகர்களும் சேர்ந்திருந்தார்கள். மேமீ 13-உ ம-ள-ள-ஸ்ரீ சாந்திராஜ சாஸ்திரியார் கிருகஸ்தர் ப்ரதிதினமும் செய்ய வேண்டிய ஸ்வாமி பூஜை முதலியவைகளை உபந்யாசித்தார். மறுதினம் காலை 8 மணிக்குப் பிறகு சபை சேர்ந்தது. அப்போது ஸ்ரீயுத வர்த்தமா னய்யா அவர்கள் வித்யாப்யாசத்தின் அவஸ்யகம் முதலியவைகளை மிகவும் ஸ்வாரஸ்யமாக பாஷணம் செய்தார்கள். அதன்மேல், சாக

ரம் தாலுக்கா கஞரில் ஒரு போர்டிங் ஸ்தாபனம் செய்யவேண்டு மென்று ஏற்பாடாயிற்று. இதற்காக ஸ்ரீயுத எம். எல். வர்த்தமா னய்யா அவர்கள் சொந்தச் செலவினல் ஒரு போர்டிங் கட்டிடம் கட்டிக் கொடுப்பதாகக் கூறினர்கள். அந்தநாட்டு ஜனங்கள் இதன் செலவுக்காக ப்ரதி வருஷமும் 500 கலம் நெல் சப்ளைசெய்வதாக வாக்தானம் செய்தார்கள். ஷை சபையார் ஜ்யேஷ்ட சுத்தத்தில் ஷை போர்டிங் ஸ்தாபிக்கப் போகிறார்கள்.

கனவான்களே! நம்முடைய நாட்டிலும் வித்யாப்யாசமும், நாக ரீகமும் மிகக்குறைவாக இருக்கின்றன. ஆகையால் நம்முடைய நாட்டிலிருக்கும் பெரியோர்கள் இந்தப் பிரகாரமே அசோசியேஷன் களை ஏற்படுத்திச் சபைகளை ஸ்தாபித்து சந்தா வசூல் செய்து போர் டிங்குகளையும் பாடசாலைகளையும் விருத்திசெய்து ஜைன பாலர்கள் வித்யாப்யாசம் செய்ய அனுகூலப் படுத்தும்படி கோருகிறேன்.

இங்ஙனம்

ஜெயந்திராஜ நயினர்,

மைசூர்.

இரகு வம்சம்.

(முன்தொடர்ச்சி-புத்தகம்-6, சஞ்சிகை-2, பக்கம்-44.)

அந்த வேளையில் தபசிகள், வேறு காடுகளிலிருந்து சமித்துக் களையும் பழங்களையும் தருப்பைகளையும் சேகரித்துக் கொண்டு வந் தனர். அக்கினியும் ஒருவர் கண்ணிலும் படாமல் அவர்களை எதிர் சென் றழைத்துக்கொண் டிருந்தது. தபசிகள் புசிக்கும் புல்லரிசி களின் பங்குக்கு பாத்தியஸ்தர்களான மான்கள், அவ்வாசிரமம் முழுவதும் அலைந்து, ரிஷிகளுடைய மனைவிகளின் குழந்தைகளைப் போல், *பர்ணசாலைகளின் வாசல்களை அடைத்துக்கொண்டு நின் றன. முனிவர் கன்னிகைகள், செடிகளுக்குத் தண்ணீர் விட்டான தும், அச்செடிகளைச் சுற்றிலுமுள்ள பாத்திகளில் வந்து நீர் குடிக் கும் பக்ஷிகளுக்குத் தைரியமுண்டாக வேண்டியதற்காக, அப்பொழு தே தூரவிலகிப் போய்க்கொண் டிருந்தனர். அப் பர்ணசாலைகளின் வெளிமுற்றங்களில் புல்லரிசித் தானியம் நல்ல வெய்யிலில் காயப் போடப்பட்டுச் சாயங்காலம் குவிக்கப்பட் டிருந்தது. அவ்விடம்

* பர்ணசாலை = குடிசை.

மான்கள் படுத்து அசைப் போட்டுக்கொண் டிருந்தன. அவ்வாசிரமத்தின் பர்ணசாலைகளில் எரிந்துகொண் டிருந்த அக்கினிக்கு அறிகுறியான புகையானது, †ஆகுதிகளின் மணத்தோடு கலந்ததாயிருந்தது. அது, காற்றினால் எதிரில் அடித்துக் கொண்டு வரப்பட்டு, ஆசிரமத்தை நோக்கிச் செல்லும் அதிதிகளைப் பரிசுத்தப் படுத்திக் கொண்டு மிருந்தது.

அப்பால் திலீபன், சாரதியிடம், "குதிரைகளை இளைப்பாற்று" என்று கட்டளை யிட்டுவிட்டு, தன் மனைவியைத் தேரிலிருந்து இறக்கிப் பிறகு தானும் கீழே இறங்கினான். உடனே பெருமை பொருந்தியவர்களும், இந்திரியங்களை வென்றவர்களுமான முனிவர்கள், சாஸ்திரத்தையே உண்மையறிவதில் பிரமாணமாகக் கொண்டவனும் பூஜிக்கத்தக்கவனும், இரக்ஷகனும், மனைவியோடு கூடியவனுமான அம்மன்னவனுக்கு நல்வரவு கூறி அவனைத் தக்கபடி உபசரித்தனர். மகரிஷிகள் சாயங்காலம் செய்யவேண்டிய ஜபஹோமாதி *அனுஷ்டானம் முடிந்தபிறகு அரசன் † தபோநிதியாகிய வஸிஷ்டரைத் தரிசித்தான். அம்முனிவருக்குப் பின்புறம் அக்னி தேவனோடு "ஸ்வாஹா" தேவி கூடியிருப்பதுபோல, அருந்ததிதேவி உட்கார்ந்திருந்தனள். அவ்விருவருடைய கால்களையும் ராஜாவும் ராணியும் பிடித்துக் கொண்டு நமஸ்கரித்தார்கள். உடனே குருவும் குருபத்தினியும் அன்பு கூர்ந்து அவ்விருவரையும் வாழ்த்தினார்கள்.

பிறகு வஸிஷ்ட முனிவர், ‡ அதிதியுபசாரத்தினால் இரதத்தில் அசைந்து குலுங்கின களை தீர்ந்தவனும், ராஜ்யமென்னும் ஆசிரமத்தில் மகா ரிஷியைப்போல் வாழ்கின்றவனுமான திலீபனிடம் ராஜ்யத்தின் குசலத்தைப்பற்றி விசாரித்தனர். சத்துருக்களின் நகரங்களை வென்றவனும், செல்வங்களுக்கு அதிபதியும், காவலனுமான திலீபன், அதர்வண வேதத்தின் நிதியான அவர் முன்னிலையில் அர்த்த புஷ்டியுள்ள பின் வரும் பதிலைச் சொன்னான்:—

"ஹே முனிவரே! § தெய்வீகத்தினாலும், § மனுஷ்ய மூலமாயும் எனக்கு உண்டாகக் கூடிய விபத்துக்களைத் தாங்கள் விலக்கு

---

† ஆகுதி = நெய் முதலியவை.

* அனுஷ்டானம் = விதிக்கப்பட்ட கிரியைகளைச் செய்தல். † தபோநிதி = தவத்திற்கு இருப்பிடமானவர். ‡ அதிதியுபசாரம் = விருந்தோம்பல். § நெருப்பு, ஜலம், வியாதி, பஞ்சம், மரணம் இவற்றாலேற்படும் துன்பம் தெய்வீக விபத்தாகும். § ஆயுத்தகர் (ராஜசேவகர்), கள்வர், பகைவர், அதிகாரி, அரசனது லோபம் இவற்றாலேற்படும் துன்பம் மாநுஷீக விபத்தாகும்.

பவரா யிருக்கையில், என் ராஜ்யம் * ஏழு அங்கங்களிலும் க்ஷேம மாயிருக்கத் தடையென்ன? மந்திரங்களை ஸ்ருஷ்டி செய்கிறவரான தங்களுடைய மந்திரங்கள், எனது சத்துருக்களை நான் அவர்கள் கண்ணில் படாமலிருக்கும் பொழுதே நாசம் செய்கின்றன. அவை களால் கண்ணுக்குத் தெரியும் குறியை மாத்திரம் பிளக்கக்கூடிய எனது கணைகள் வீணுகின்றன. ஹோமம் செய்கிறவரான தாங்கள் விதிப்படி அக்கினியில் ஹோமஞ்செய்த ஆகுதியானது, மழையின் மையால் வாடிவருந்தும் பயிர்களுக்கு மழையாகின்றது. என்னு டைய குடிகள் † பூர்ணாயுசுள்ளவர்களாயும் நோயற்றவர்களாயும் ‡ ஈதிபாதை யற்றவர்களாயும் இருக்கின்றனர். அதற்குக் காரணம் தங்களுடைய பிரம்ம தேஜஸ்ஸே யாகும். பிரம்மாவின் வயிற்றிலு தித்தவரும், என் குருவுமாகிய தாங்கள் இவ்வித வேலை யெடுத்துக் கொண்டிருக்கையில், ஆபத்தற்றவனுகிய என்னுடைய செல்வங்கள் நிறைவு இல்லாமலெப்படி யிருக்கும்?

ஆனால், தங்களுடைய மாட்டுப் பெண்ணான இவள் வயிற்றில் எனக்கேற்ற குழந்தையைப் பெறாதவனுகிய நான், பூமிதேவி தீவுக ளோடு கூடியவளா யிருந்தபோதிலும் இரத்தினங்களைப் பெறுகிற வளா யிருந்தபோதிலும் அவளிடத்தில் விருப்பம் கொள்ளவில்லை. என்னோடு S பிண்டம் நின்றுபோவதை ஊகிக்கும் என் மூதாதை கள், சிரார்த்த காலத்தில் நான் கொடுக்கும் O "ஸ்வதை"யில் கொஞ் சம் மீத்துவைத்துக்கொள்வதில் கருத்துக்கொண்டவர்களாய் அதை வயிறார உட்கொள்ளார்கள் என்பது நிச்சயம். என் பிதிர்க்கள், என்னால் தர்ப்பணம் செய்யப்படும் நீர் எனக்குப் பிறகு கிடைப்ப தரிது என்று நினைத்துத் தமது பெருமூச்சுக் காற்றினால் கொஞ்சம் சூடேறும்படி அதை உட்கொள்ளுகின்றனர். இந்த ஸ்திதியிலுள்ள

* அரசு, அமைச்சு, நட்பு, பொக்கிஷம், ராஜ்யம், கோட்டை, சேனை என்பவை ஏழு அங்கங்களாம். † நூறு வருஷங்கள் வாழ்வது பூர்ணாயுசு எனப் படும். ‡ அதிகமழை, மழையின்மை, எலிகள், வெட்டுப்பூச்சிகள், கிளிகள், அர சர் மிக நெருங்கி யிருத்தல் இவற்றால் ஏற்படும் துன்பம் ஈதிபாதைகளாம். S சிரார்த்தத்தில் பிதுர்க்களுக்குக் கொடுக்கும் உணவு 'பிண்ட' மெனப்படும். O பிதுர்க்களுக்குரிய உணவு "ஸ்வதை" யெனப்படும்.

நான் * லோகாலோக பர்வதம்போல, யாகங்களால் பரிசுத்தனுயி ருப்பதால் பிரகாச முள்ளவனுயும் மக்கட்பேறில்லாமையால் பிரகாச மில்லாதவனுயும் இருக்கிறேன். தவம் தானம் இவைகளால் கிடைக் கும் புண்ணியமானது மறுமையில் இன்பமளிக்கின்றது. சுத்தமான வம்சத்திலுண்டான ஸந்ததியோ இம்மையிலும் மறுமையிலும் சுகத் தைக் கொடுக்கின்றது. ஏ, குருவே! தாங்களே அன்பால் நீர் வார்த்து வளர்த்த ஆசிரமத்துக் கன்றுமரம் காய்க்காமல் மலடாய் நிற் பதுபோல, சந்ததியற்று நானிருக்கப் பார்த்த தங்களுக்கு மனம் எவ்விதம் நோகாமலிருக்கின்றது? குளிப்பாட்டப்படாத யானையை அதைக்கட்டியிருக்கும் முளை வருத்துவதுபோல, † முக்கடன்களுள் கடைசிக் கடனுகிய இம்மகப்பேறு இன்மையானது என்னைக் கொல் லுகின்றது. தந்தையே! நான் இதிலிருந்து மீளும்படி தாங்கள் ஒரு வழி பிறப்பிக்கவேண்டும். இக்ஷ்வாகுவம்சத்து மன்னவர்களுக்குக் கிட்டக்கூடாத காரியங்களில் தங்கள் மூலமாய்ச் சித்திகிடைப்பது வழக்கமன்றோ?" என்றான் திலீபன்.

இவ்வாறு அரசன் விஞ்ஞாபனம் செய்யும்போது முனிவர், கண்கள் அசையாமல் ஒரு நொடிப்பொழுது தியானத்திலிருந்தார். அப்பொழுது அவர், தூங்கும் மீன்களையுடைய மடுவில் மீன்களும் மடுவும் அசைவற்றிருப்பதுபோல விளங்கினர். ஆத்மத்தியானத் தினுல் பரிசுத்தரான வஸிஷ்ட முனிவர் * பூபாலனுக்குச் சந்ததி யுண்டாவதற்கு ஏற்பட்டிருந்த தடையைத் தியானத்தினுல் கண் டறிந்து, அரசனுக்கு அதைத் தெரிவிக்கலானுர்:—

"ஏ, அரசனே! முன்னெருசமயம் நீ இந்திரனிடம் போய்விட் டுத் திரும்பி வரும்பொழுது, வழியில் கற்பகவிருக்ஷத்தின் நிழலில் காமதேனு படுத்துக்கொண்டிருந்தது. அப்பொழுது ஸுதக்ஷிணை ருதுஸ்நானம் செய்திருந்தமையால் தர்மத்துக்குக் குறைவு நேரிடு மென்றெண்ணி, இவளால் † பிரதக்ஷிணம் செய்யப்பட வேண்டியவ ளாகிய காமதேனுவை இவள் பிரதக்ஷிணம் செய்யாதிருக்கும்படி

* பூமியைக் கோட்டையைப்போல் சுற்றிக்கொண்டிருக்கும் மலை லோகா லோக பர்வதமாம்; இம்மலையின் உட்புறம் சூரிய கிரணத்தினுல் பிரகாசித்தும் வெளிப்புறம் சூரிய கிரணம்படாமல் பிரகாசமற்றும் இருப்பதால், இதற்கு இப் பெயர் வந்தது. † முக்கடன்களாவன:—தேவர்கடன், முனிவர்கடன், பிதுர்க் கடன் என்பவை.

* பூபாலன்-அரசன். † பிரதக்ஷிணம் = வலம்வருதல்.

இவளுக்கு நீ கட்டளையிட்டுக் காமதேனு விஷயத்தில் நீ பிழை செய்துவிட்டாய். அப்பொழுது அக்காமதேனு "மக்களைப் பெற வேண்டியதற்காகவே நீ என்னை அசட்டைசெய்து போகிறபடியால் அம்மக்கள், என் குழந்தையை நீ பூஜிக்காவிட்டால் உனக்கு உண்டாகமாட்டார்கள்" என்று உன்னைச்சபித்தனள். அப்போது ஆகாச கங்கை சப்தித்துக்கொண் டிருந்தமையாலும், அதில் S அஷ்டதிக் கஜங்கள் மதம்பிடித்து விளையாடிக்கொண் டிருந்தமையாலும், அச்சாபம் உனக்காவது, உன் ‡ ஸாரதிக்காவது செவியில் கேட்கவில்லை. உன் கோரிக்கை, அவளை அசட்டைசெய்ததால் தடைப்பட் டிருக்கின்றதென்று அறி; வணங்கத்தக்கவர்களை வணங்காமல் விடுதல் க்ஷேமத்துக்குத் தடையாகிறது. இப்பொழுது அக்காமதேனு வானவள், வருணன் செய்யும் 'தீர்க்கஸத்திரம்' என்னும் யாகத்துக்குப் பாலும் நெய்யும் கொடுப்பதற்காகப் பாதாள லோகத்திற்குப் போயிருக்கிறாள். அதன் வழியானது பாம்புகளால் அடைக்கப்பட் டிருக்கின்றது. ராஜனே! நீயும் உன் மனைவியும் பரிசுத்தத்துடன் அக்காமதேனுவின் கன்றை அதற்குப் பிரதியாகவைத்து ஆராதிக்க வேண்டும். காமதேனுவுக்கு அதனால் அவசியம் சந்தோஷமுண்டாகும்" என்றார் வஸிஷ்ட முனிவர்.

இவ்வாறு ஹோமஞ் செய்கிறவரான வஸிஷ்டர் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது * ஆகுதிகளைக் கொடுக்கின்றதும், தோஷமற்றதும், நந்தினி யென்று பெயருள்ளதுமான தேனுவின் கன்றானது காட்டிலிருந்து திரும்பிவந்தது. அதன் நிறமானது தளிரைப்போல் சிவந்தும் கண்ணுக்கு இனிமையாயும் இருந்தது. நெற்றியில் ஒரு வெள்ளைச்சுட்டி மூன்றாம்பிறை வடிவுள்ளதா யிருந்தது. இப்பசு, இந்நிறத்தாலும் நெற்றியிலுள்ள வெள்ளைச் சுட்டியாலும் பிறைச் சந்திரனோடு கூடிய மாலைப் பொழுதைப்போல் விளங்கிற்று. குடம்போலப் பருத்தமடியையுடைய அந்நந்தினி, தன் கன்றைப் பார்த்தவுடன் பெருகியதும், கொஞ்சம் உஷ்ணமானதும், † அவபிருதஸ்நானத்தைவிடப் பரிசுத்தமானதுமான பாலால் பூமியை நனைத்துக்கொண்டு வந்தது. அப்பசுவின் குளம்புகளால் கிளப்பப்பட்ட

---

‡ ஸாரதி = தேர்ப்பாகன். S. ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புஷ்பதந்தம், ஸார்வபௌமம், ஸுப்ரதீகம், என்பவை அஷ்டதிக் கஜங்களாம்.

* ஆகுதி = ஓமத்திற்குரிய திரவ்யம். † யாகத்தின் முடிவில் பரிசுத்த நிமித்தம் செய்யும் ஸ்நானம் அவபிருத ஸ்நானமாம்.

தூசியானது, அரசன், சமீபத்திலிருந்ததால் அவன் மேல்பட்டு அவனுக்குப் புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்வதனு லுண்டாகும் தூய்மையைக் கொடுத்தது.

சகுனங்களை யறிந்த தபோநிதியானவர் இத்தூய தரிசனமுள்ள பசுவைப் பார்த்ததும், யாகங்கள் பண்ணி வைக்கத்தக்கவனும், கோரிக்கை வீணுகாதென்று தைரியங் கூறப்பட்டவனுமான அரசனைப் பார்த்து மறுபடியும் சொல்லலுற்ருர்:—"ஏ, அரசனே! கல்யாணியாகிய இப்பசு, பெயரைச் சொன்ன மாத்திரத்திலேயே வந்துவிட்டதால், உன் காரியம் கைகூடுவதற்கு நாள் செல்லாதென்று நீ அறி; வித்தையை அப்பியாசத்தினல் திருப்தி செய்வதுபோல, நீ காட்டில் திரிவதையே தொழிலாகப் பூண்டு, இதனை எப்பொழுதும் பின் தொடர்ந்து, இதனுக்குத் தொண்டுபுரியக் கடவாய். இது, நடக்கும்பொழுது நீயும் நட; நிற்கும்பொழுது நீயும் நில்; படுக்கும்போது நீயும் உட்காரு; ஜலம் குடிக்கும்பொழுது நீயும் குடி; உனது மனைவியும் பக்தியோடு இதனைக் காலையில் பூஜித்து, தபோவனத்தின் எல்லை வரையில் வழிகொண்டு வந்து விடட்டும்; மாலையில் இதனை எதிர்கொண்டு அழைக்கட்டும். இதனுக்கு அருள் உண்டாகும் வரையில் நீ தொண்டு புரிவதே தொழிலாகக் கொண்டிரு. உனக்கு யாதொரு இடையூறும் உண்டாகாமலிருக்கும். உன் தகப்பன் மக்கட் பேறுடையவர்களுக்கு எங்ஙனம் முதல்வனுனனே, அவ்விதம் நீயும் ஆகக்கடவாய்." என்ருர் வஸிஷ்டர்.

தேச காலங்களை யறிந்த திலீபன், தன் மனைவியோடு குருவின் கட்டளையைச் சந்தோஷத்துடன் அங்கீகரித்தான். இரவு வந்ததும் கற்றவரும், இன் சொல்லையுடையவரும், பிரம்ம புத்திருமான வஸிஷ்ட முனிவர், நற்காலத்தைப் பெற்ற மன்னவனைப் படுத்துக் கொள்ளச் சொல்லி யனுப்பினர். விரத நியமங்களை யறிந்த அம்முனிவர், தம் தவத்தின் மகிமையினல் அரசனுக்கு * ராஜோபசாரம் செய்யச் சக்தியுள்ளவரா யிருந்தும், அரசனுடைய நியமத்தை உத்தேசித்து, காட்டுக்கேற்ற ஆகாரம், ஜாகை முதலியவற்றை ஏற்படுத்தினர். அரசனும் ராணியும் விரதம் பூண்டு † குலபதியாகிய வஸிஷ்டரால் ஆஞ்ஞாபிக்கப்பட்டு பர்ணசாலையில் தங்கி § தர்ப்பசயனத்தில் படுத்

---

* ராஜோபசாரம் = அரசனுக்குச் செய்யவேண்டிய மரியாதை. † குலபதி = குலத்திற்குத் தலைவர். § தர்ப்பசயனம் = குசப்புல்லாலாகிய படுக்கை.

துக்கொண்டு, இரவைப் போக்கினர்கள். வஸிஷ்ட முனிவருடைய சிஷர்கள் அத்தியயனம் செய்ததனால் இரவு நீங்கியது தெரியவந்தது.

முதலாவது ஸர்க்கம் முடிந்தது.

(தொடரும்)

By: M. M. Narayanasawmy Aiyer,
Mudikondam.

பக்தி.

நேயர்களே!

இப்புவியிலுற்ற நம்மனைவோர்க்கும் முக்கியமா யமையவேண்டுவது கடவுள் பக்தியேயாம். கடவுள்பாற் செலுத்தும் பக்தியே நம்மறுமைக்குரியது. இத்தெய்வபக்தி யில்லா மானிட உருவம் இருப்பினும் இறந்ததற்கே ஒப்பிடப்படும். பக்தி யுள்ளோனுக்குப் பணியாள் பரமனே. பக்தியின் பெருமை யளவிடற்கரிது. இத்தகைய பக்தியை நாம் ஒவ்வொருவரும் கொண்டொழுகல் முக்கிய கடமையன்றோ? கீழ்வரும் கதையே இதற்குப் போதிய சான்றும். ஓர் ஊரில் ஏழைப்பிராமணன் ஒருவனிருந்தான். அவனுக்குக் கற்பே யுருவா யுதித்ததெனச் சொல்லும் மனைக்கிழத்தியும் இரு குழவிகளும் உண்டு. அப்பிராமணன் நல்லசத்யன்; நற்குணத்தான்; நாடோறும் பூஜையின்றி யன்னமுண்ணான். குசேலவரே, அவனிலும் பணக்காரரெனச் சொல்லலாம். இப்பிராமண னில்லறத்தை நோக்கின், தினந்தோறும் கொண்டுவரும் பிக்ஷை அரிசியினாலேயே இவரின் இல்லறம் இனிது நடந்தது. இவ்விப்பிரன் கொண்டுவரும் சிறிதரிசியைக் கூழாக்கிக் கணவனுக்கும் குழந்தைகளுக்கும் இட்டு மீந்த சிறிதுணவை யருந்துவாள் அவ்வுத்தமியாமம்மை. இவ்வாறிருங்கால் ஓர்தினம் அப்பிராமணர் எங்கு சுற்றியும் ஓரரிசியும் கிடைக்காது மனம்வருந்தி இன்று வாசற்படியில் நின்று என்னையே நோக்கும் எம்மழலைவாய் மக்களுக்கு நான் யாதுரைப்பேன்; கண்ணிமை கொட்டாது என்னை நோக்கியவண்ணம் இதோ அப்பா வராச்சு அழாதே கண்மணிகாள்! எனத் தேறுதல் சொல்லும் மனைவியின்பால் எவ்வாறு செல்லுவேன். ஈசா! கைலயங்கிரிவாசா! காப்பதுன் பாரமல்லவா? எனக்கலங்கி வீட்டிற்கேகும் பாதையில் கிடந்த செத்த பாம்பொன்றைக் குச்சியிற்றூக்கித் தோளில் வைத்துச் சென்று வீட்டுக் கொல்லைப் புளியமரத்தடியற் போட்டு விட்டுக்

குழந்தைகள் ஓடிவந்தால் இதை வேடிக்கையாகக் காட்டி அவர்களைச் சந்தோஷிப்பிக்கலாமென உள்ளே நுழைந்தனன். நுழைந்தவுடன் குழந்தைவர அவர்களிடம் அப்பா! உங்களுக்கு வேடிக்கையாகப் புளிய மரத்தடியில் ஒரு வஸ்து இருக்கிறது பாருங்கள் எனச் சொன்னான். இப்பிராமணன் உள்நுழைந்ததும் அக்கற்பிளநங்கை ஓ! ஓ! இன்று ரொம்ப சிரமப்பட்டு வருகிறாப்போ லிருக்கிறது நமது நாதன். ஒன்றும் கிடைக்கவில்லைப்போல் இருக்கிறது என ஓடிவந்து அவனை உபசரித்து அவனுக்கு விசிறிகொண்டு விசிறினாள். பிராமணன் போனதும் தனக்கு ஒன்றும் அகப்படாததும் பாம்பைக் கொண்டு வந்து போட்டதும் நவின்றான். கொல்லையில் புளியமரத்தில் முத்தாரமொன்றைக் கொணர்ந்த கலுழன் ஆரத்தைக் கீழே போட்டுவிட்டுச் செத்தபாம்பை எடுத்துத் தின்றுகொண்டிருந்தது. சிறார்களோ போனவுடன் ஆரத்தை எடுத்துத் தம் பிதாவண்டையில் கொடுக்க அவர் அது வந்த விவரமறிந்து அவ்வூர் அரசனிடம் அதைக்கொடுக்க அவ்வரயன் இச்சிவ பக்தனுக்கு நவநிதிகளும் வழங்கி வேண்டிய நிலங்களும் விட்டான். இப்பிராமணர் நாடோறும் தவறாது பூஜையியற்றி அச்செல்வங்களை யெல்லாம் சிவதருமங்கட் குபயோகஞ் செய்து இனிது இல்லறம் நடாத்தி அருந்ததிக்கொப்பான கற்பிள நங்கையோடும் சிவசாயுஜ்யமடைந்தனன். ஆதலின், 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்பது திண்ணமன்றோ?

கைலாசம்,
வல்லி புரம்.

கல்வி.

ஆதியிலே மனிதர்கள் தங்களுடைய மனோ பாவங்களைப் பிறருக்கு அறிவிக்கக் கூடாமலிருந்தார்கள். அப்பொழுது அவர்கள் வேறொருவனுக்கு இரகசியமான சங்கதி தெரியப்படுத்த வேண்டுமானால் ஆள் மூலமாய்ச் சொல்லி யனுப்பித் தான் தெரிவிப்பார்கள். உபாத்தியாயரிடத்தில் மாணக்கனானவன், அவர் சொல்லும் விஷயங்களை யெல்லாம் வாய்ப்பாடமாகக் கேட்டுக்கொண்டும், அவர் கட்டளையிடும் வேலைகளை யெல்லாம் பணிவுடன் செய்தும் வரவேண்டும். அக்காலங்களிலேதான் ஒவ்வொரு சிஷ்யரும் இதே மாதிரி குருவினிடம் கல்வி பயின்று அதற்காக அநேக வெகுமானங்கள்

பெற்றூர்களென்றும், தவிர குருபக்தியைச் சிரமேற்கொண்டு குருவைத் தொழுதார்களென்றும் பெரியோர் சொல்லுகிறூர்கள். அக்காலத்தில் ஜனங்கள் அவர் அவர்களுடைய சப்தத்தைக்கொண்டு வஸ்துக்களைத் தெரிவித்து வந்தார்கள். பின்னர் சில வித்வசிரோமணிகள் ஏற்பட்டு, அச்சப்தங்களுக்கு அக்ஷரத்தை ஏற்படுத்தினர்கள். பிறகு அக்ஷரங்களைக் கொண்டே வடமொழியிலும், தென்மொழியிலும், பற்பல நூற்களை எழுதி வைத்தார்கள். அவைகள் சுவடிகளில் எழுதிப் படிக்கப்பட்டு வந்தன; அப்படிப் படிக்கப்பட்டு வந்த காலத்தில் ஒருவன் இராமாயணம் படிக்க வேண்டுமானல் அவன் ஒரு குருவை நாடி எழுதிக் கொடுக்கும்படி கேட்கவேண்டும். இதற்காகப் பணமும் கொடுக்கவேண்டும். அல்லாமலும் எழுதுவோனுக்காகக் கொஞ்சம் கூலி கொடுக்கவும் வேண்டும். அப்படிக் கொடுத்தாலுங்கூட எழுதி முடிப்பதற்கு நாள் பல செல்லும். படிப்பு விஷயத்தில் அக்காலத்தில், இம்மாதிரியான கஷ்டங்கள் இருந்தன. இக்காலத்திலோ வாசிப்பதற்காக அநேக சௌகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பாருங்கள் ஒரு உபாத்தியாயர் ஏககாலத்தில் அநேகம் பிள்ளைகளுக்குப் போதிக்கக்கூடியவரா யிருக்கின்றூர். புத்தகங்கள் கிடைப்பதற்கு வேண்டிய சௌகரியங்களு மிருக்கின்றன. (அக்காலத்திலோ இம்மாதிரி போதிப்பதும், புத்தகங்கள் கிடைப்பதும் இயலாத காரியங்களாய் இருந்தன) ஆதலின், இக்காலத்தில் எவரும் எளிதில் கல்வி கற்றுக் கொள்ளலாம். கல்வியினுலேற்படும் பிரயோசனங்கள் பலவுள. ஆதலின் எல்லோரும் கல்வி விருத்தி செய்ய முயற்சி யெடுத்துக் கொள்ளுங்கள். கல்வியினுல் வீடு பெறுவீர்கள்.

“ அறம்பொரு ளின்பமும் வீடும்.பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்—உறுங்கவலொன்று
உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க்குற்ற துணை.”

என்பது நீதிநெறி விளக்கம்.

நாம் கல்விப்பொருளையே கைக்கொள்ளவேண்டும். கல்வியினுல் நல்லறிவு மிகும். பெரியோர் சென்ற நன்மார்க்கத்தில் அது புத்தியைச் செலுத்தும்படி செய்யும்.

“ எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு.”

என்ற திருக்குறளின்படி கணித நூலும், இலக்கண நூலும் மனிதர்கட்கு இரண்டு கண்களாம்.

"கண்ணுடைய ரென்பர் கற்ரோர்முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்."

என்ற தமிழ் மறையின்படி கல்லாதவர்களின் முகத்திலுள்ள கண்கள் இரண்டும் புண்கள் என்றும் சொல்லப்படும். ஆகையால் நன்ருய்ப் படித்த வித்துவான்களை எல்லோரும் வணங்கி உபசரிக்கிருர்கள். கற்றவன், மன்னரினும் சிறந்தவனுகிருன்.

"மன்னனு மாசறக் கற்ரேனுஞ் சீர் தூக்கின்
மன்னனிற் கற்ரேன் சிறப்புடையன்—மன்னர்க்கு
தந்தேச மல்லாற் சிறப்பில்லை கற்ரோர்க்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு."

என்பது ஔவை மூதுரை.

சகோதர சகோதரிகளே! நீங்கள் கல்வியினிடத்துச் சோம்பலுற்று இராமல் அதிலே மனதைக் கவனத்துடன் செலுத்தி அதனைக் கற்கவேண்டும். வீணிலே காலத்தைக் கழிக்க வேண்டாம். எப்பொழுதும் கல்விப்பொருளை அடைவதிலேயே முயற்சி அதிகம் இருக்குமானுல் அம்முயற்சி வீண்போகாது. (முயற்சி திருவினையாக்கும்) மணற்கேணி தோண்டுமளவும் தண்ணீர் சுரப்பது போல கல்வி கற்கக்கற்க புத்தி அதிகரிக்கும்.—புகழும் உண்டாகும். சூரியன் சந்திரன் முதலானவைகள் இருளைவிலக்கி ஒவ்வொருகாலத்தில் ஒவ்வொரு பாகத்தில் மட்டும் வெளிச்சத்தைக் கொடுக்கும். கல்வியானது அதனைப்பெற்ற ஒருவனுக்கு எப்போதும் எவ்விடத்திலும் அஞ்ஞான இருளையகற்றி உண்மைப் பொருளை விளங்கச் செய்யும். ஆதலின், செல்வப் பொருளினும் கல்விப் பொருளே சிறந்தது. செல்வப்பொருள் செலவழியும்; களவாடவும் படும். ஒருவருக்குக் கொடுக்கப்பட்டாலுங் குறையும். கல்விப்பொருளோ ஒருவருக்குக் கொடுக்கக் கொடுக்க மேன்மேலும் விருத்தியாகும்; அதாவது செலவழித்தாலும் பெருகுமே யல்லாமல் குறையாது. களவிற்கும் உரித்தாகாது. கல்வியினுல் நல்லொழுக்கமும், நல்லொழுக்கத்தினுல் யோக்கியதையும், யோக்கியதையினுற் பொருளும், பொருளினுற் தருமமும், தருமத்தினுற் சுகமும் உண்டாகுமாதலால் எல்லாப் பொருளுக்கும் கல்வியே காரணமா யிருக்கின்றது. ஆதலால் நாம் கல்விப் பொருளையே முதலில் பெற முயற்சி செய்வோமாக.

நம் சிலனில், கல்வியைப் பற்றிய பல வியாசங்கள் அடிக்கடி வருகின்றன வெனினும், நம் ஜைன சகோதரர்களிற் பலர் அவற்றைக் கவனிக்காமல் சிலனைப் புறக்கணிக்கத் தக்கவர்களா யிருப்பதால், அவர்களின் பொருட்டே இத்தகைய வியாசங்கள் பன்முறையும் பிரசுரிக்கப்படுகின்றன.

V. P. வசுபாலன்,
வேங்கிய நல்லூர்.

தகவுரை.

மேருமந்தர புராணம்.

இது, ஸ்ரீ புராணத்திலுள்ள மேருமந்தர புராணத்தைத் தழுவி வாமன முனிவரால் 1406 செய்யுட்களால் தமிழில் இயற்றப்பெற்றதாகும். தமிழ்நாட்டில் ஜைன ஆசிரியர்கள் தமிழிற் செய்த பற்பல நூல்களுள் இது முதன்மை பெற்றதாகும். ஜைனர்களுக்கு அம்மததத்துவங்களை எளிதில் போதிக்கக் கூடியதுமாம். விமலதீர்த்தங்காருடைய துவாதசகணங்களுள் முதன்மை பெற்றவர்களாகிய மேரு, மந்தரன் என்பவர்களது சரித்திரமே இதில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அச்சரிதையின் கிளையாகிய பற்பல கதைகளும் விரித்துக் கூறப்பட்டிருக்கின்றன. இதன் ஆசிரியர் வடமொழியிலும் மிகவல்லுநராதலின் பெரும்பான்மையும் வடமொழிகளைத் திரித்து இதன் செய்யுட்களிற் பிரயோகித்திருக்கின்றனர். இது, தமிழ் வித்வான்களால் மிகவும் சிலாகிக்கத் தக்கது. இவர் இங்ஙனம் வடமொழிகளை மிகுதியாகக் கலந்து செய்யுளியற்றி யிருப்பதால், தமிழ் வித்வான்களுக்கு எத்தகைய வடமொழிகளையும் தென்மொழியில் சுலபமாகத் திரித்து உபயோகித்தற்கு இந்நூல் ஒரு வழி காட்டியுமாகும். மேலும் இது தமிழ்ப் பெருங்காப்பிய இலக்கணங்கள் முழுதும் அமையப்பெற்றது. இதன் கவிகளெல்லாம் சிந்தாமணிச் செய்யுட்களேபோல், படிப்போர் மனதைக் கவரத்தக்க இனிமையும் பொருளமைதியும் பொருந்தியவை. கற்பனை நயங்களிலும் சிந்தாமணி முதலிய காவியங்களினும் இது சிறந்ததாகும்.

இதில் மனிதர்க்கின்றியமையாத அநேகம் நீதிகளும் ஆங்காங்கே வற்புறுத்திக் கூறப்பட்டிருக்கின்றன; லோக சொரூபங்கள், ஆகமவகைகள், பஞ்சாஸ்தி காயங்கள், அனந்த சதுஷ்டயம், ஆஸ்

ரவ பேதங்கள், நன்னயம் தீ நயங்கள், காலவகைகள், எண்குணம், ஏழுநிலம், ஐஞ்சிறப்பு, நாடுகளின் வகைகள், ஜோதிவகைகள், கர்ம வகைகள், சப்ததத்துவம், சமவசாணவிவரம், சுக்கிலத்தியானம், நவபதார்த்தம், தேவர்வகை, சம்வரை நிர்ஜரைவிவரங்கள், நாற்கதி விவரம், பஞ்சபரிவர்த்தனே, ஜீவாஜீவவிவரங்கள், பொறிவகைகள், கணதார் வகைகள், மோக்ஷஸ்தானம், இரத்தினத்திரயம், ஜோதிஷ்கர், ஷட்திரவியம், ஸ்கந்தம், அஷ்டசுத்தி, அந்தராயம், ஆவாசம் ஆறு, இருவகைத்துறவு, ஊற்றுப்பத்து, ஏகாதசாங்கம், ஐம்பரி வட்டணை, ஒன்பதுயோகம், குப்திவகைகள், பிரகிருதிகளின் வகைகள், சன்னை, ஞானுவாணீயம், தரிசனுவாணீயம், துதிகள், துவாதசானுப்பிரேட்சை, சாரித்திரம் பதின்மூன்று, பரிநிர்வாண பூஜை, தீர்த்தங்கரர் வகைகள், வித்தியாதரர்விவரம், விஜயார்த்த பர்வதவிவரம், தானவகைகள், ஆர்த்தத்தியானம், களவின் வகைகள், மூடவகைகள், அனுபூர்வி, விரதவகைகள், அப்ரத்தியாக்கியானம், அவமோதரியம், காயக்கிலேசம், சர்வசங்க பரித்தியாகம், தவம் பனிரண்டு, தியானவிவரம், பாகிய பரிக்கிரகம், பிராயச்சித்தம், ரசபரித்தியாகம், விருத்தி பரிசங்கியானம், விவிக்தசய்யாஸனம், வையாவச்சம், ஜீவஸ்வரூபம், ஸ்வாத்தியாயம், இந்திரர்விவரம், பஞ்சமந்திரம், அவதிஜ்ஞானம், கஷாயவகைகள், கல்பவகைகள், சம்யமம், துச்சாரித்திரம், துறக்கத்தியல்பு, நரகதுன்பவிவரம், நால்வகைத்துக்கம், நான்கு மங்கலம், முப்பத்துநான்கு அதிசயர், ஆரியாங்கனேகள், அநித்தியவாதம், அபின்னவாதம், அவாச்சியவாதம், ஆயுஷ்யகர்மம், போக பூமிவிவரம், ஆற்றல்மூன்று, ஷட்ஜீவனி காயங்கள், கோத்திரகர்மம், சூனியவாதம், தசமுண்டம், தத்துவம், மித்தியாத்துவம், வேதனீய வகை, நாமகர்மம், தீவுவகைகள், நாற்பத்தொரு பிரகிருதிகள், நித்தியவாதம், நோன்பு வகைகள், சமுத்திர வகைகள், மோகனீயம், யோகவகைகள், விஷயஸம்யமம், ஷட்கண்டங்கள், ஸ்யாத்வாதம். ஏழு அச்சங்கள், அப்பியந்தர பரீஷஹங்கள் பதின்மூன்று, அமளியின் விதம்ஐந்து, அனந்தசுகம், ஈபாறடக்கம், உபசமபரிணமம், எண்பத்தைந்து வினே, கர்மக்கேட்டின் விவரம், ஸம்ஸார துக்கங்கள், சதுர்விதஞானம், பஞ்சபாவ விவரம், பதினெண்குற்றம், பாஹ்யபரீஷஹங்கள் ஒன்பதின்வகை, பிராணி ஸம்யமம், விஷய ஸம்யமம், வேதம் நான்கு, ஷட்திரவியங்களின் திரவிய குணபரியாயங்களின் விசேஷங்கள், ஸப்தப்பிரகிருதிகள், ஸம்மியக் சாரித்திரம், விஷய ஸம்யமம், ஷட்ஜீவனி காயங்கள், பிராணி ஸம்யமம், தருமத்தியா

ணம், சரிபாமார்க்கம், திரிலோக பிரஜ்ஞப்தி என்னும் ஆகமம், தேவ
சுக விவரம், நரகாயுஷ்ப அளவு, பாரணை, விலங்குகதிக்குக் காரணம்,
ஜீவன்களின் நாசவிவரம், இந்திரிய விவரங்கள், ஐந்துவித காயங்கள்,
மகாநதிகள் இருபத்தெட்டு, குலபர்வதங்கள் பன்னிரண்டு, வஜ்ரவேதி
கைகள், மந்தர பர்வதங்கள் இரண்டு, நரகங்களின் பெயர்கள், நரகங்
களின் புரைகள், நாரகர் இயல்புகள், ஆராதனை நான்கு, இருக்கை
இரண்டு. சுபோபயோக குணங்கள், நான்கு வணக்கம், விஞ்ஞைகள்,
சிரேணிவகைகள், அசரணபாவனை, அசுசித்துவம், அன்னியத்துவம்,
ஏழடிசென்று வணங்கல், சரீராதிகளின் அநித்தியத் தன்மை, தர்மஸ்
வாக்கியாயம், திரவிய ஸம்வரை, பாவநிர்ஜரை, திரவிய நிர்ஜரை, ஷி
ஆஸ்ரவ ரூபங்கள், வ்யோமகமனத்துவம், ஸ்ரீ விகாரவர்ணனை, அசுர
ரின் ஆயுஷ்ப முதலிய விவரங்கள், அசோகவிருக்ஷம், மனுஷியர் இய
ற்கை, அனந்தசுகம், தரிசனம், வீரியம், ஆத்மசுத்தி பரிணமம், ஆறு
காலங்களையுடைய க்ஷேத்திரங்கள், ஆறு பிரகிருதிகள் நீங்கல், ஸப்
தரித்திகள், இருபத்தெட்டு மோகனீயப் பிரகிருதிகளை நீக்கல், உத்
தமசவுசம், கர்மக்கேடுகள், கர்மங்கள் பந்திக்கும் விதங்கள், விமான
வகைகள், கற்பகச்சோலை முதலியவை, கேவலஞானம், சீதோதா
நதி, சைத்திய விருக்ஷங்கள், சூரியசந்திர நக்ஷத்திர விவரங்கள், நந்
தீசுவரத்தியல்பு, ஜினாலயச்சிறப்பு, நித்திரை பிரசலை கெடல், பத்து
மாசு, பரிநிர்வாண பூஜை, பவண தேவகூட்டம் முதலாகிய பத்து
வித ஸமூகங்கள், பன்னிருகணம், பாவனை வகைகள், பிறப்பு வகை
கள், மனுஷ்யரிருப்பிடத்தின் அளவு முதலியன, சித்ததத்துவ
மடைதல் முதலியன, ரித்திவிவரங்கள், ஜினதீக்ஷாவிதி, ஜீவன்
கள் கதியாந்தரங்களுக்குச் செல்லும்போது ஏற்படும் சமயங்கள்,
ஜோதிஷ்கர் இயல்பு, ஸமிதிவகைகள், ஸித்திக்ஷேத்திரத்தியல்பு,
முதலிய எண்ணிறந்த ஜைன மததத்துவங்களும், பிறவிஷயங்களும்
விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. இத்தகைய பல விஷயங்களடங்
கிய இந்நூல் 13 சருக்கங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றது.

இந்த அட்டவணையை நோக்குங்கால் இந்நூல் ஜைனர்களுக்
கும், இதர மதஸ்தராகிய கல்விமான்களுக்கும் பெரிதும் பயன்படக்
கூடியதென்பது நன்கு விளங்கும். இஃதிங்ஙனம் சிறந்திருந்தும்
அச்சில் வெளிவாராதது தமிழுலகத்திற்கு ஒரு பெருங்குறையா யிருந்
தது. இக்குறையை நிவர்த்திக்கக் கருதிச் சுமார் 46 வருஷங்களுக்கு
முன், காஞ்சிபுரத்திற்குச் சமீபத்திலுள்ள கரியம்புத்தூர்-குந்தியப்ப
நயினாரவர்களின் கனிஷ்ட புத்திரராகிய பாகுபலி நயினாரவர்களும்

புதுக்கோட்டைச் சமஸ்தான வித்வான்- பனையஞ்சேரி முருகேச கவி ராயரவர்கள் சகோதராகிய அரங்கசாமிக்கவிராயரவர்களும் இதன் மூலத்தை மட்டும் திருத்திக்கொடுக்க, ஷை பாகுபலி நயினாரவர்கள் சகோதராகிய சக்கரவர்த்தி நயினாரவர்கள் இந்நூலின் 5 சருக்கங்களை மட்டும் சென்னைக்கலாரத்நாகரம் அச்சுக்கூடத்தில் அச்சிட்டு வெளிப்படுத்தினர். அது முதல் இது காறும் இந்நூலின் மீதிப்பாகத்தையும் வெளிப்படுத்த எவரும் முன் வந்திலர். இங்ஙனம் இந்நூல் பூர்த்தியாக வெளிவராமையானும், முன் வெளி வந்த ஐந்து சருக்கங்களுங் கூட மூலமாயிருத்தலானும், அப்பதிப்பும் கிடைக்காமற் போய் விட்டமையானும் மேருமந்தர புராணத்தை முற்றுறப்படித்து அதன் பொருள்களைத் தெளிவாக உணர்ந்து கொள்ளுதல் தமிழ் நாட்டினர்க்கு முடியாமையாயிருந்த குறையானது முழுவதும் நீங்கினபாடில்லை. ஆதலின், சில வருஷங்களுக்கு முன்னர் நாம் தருமசீலன் அச்சுக்கூடத்தை ஸ்தாபித்து ஜைன கிரந்தங்களை வெளிப்படுத்தத் தொடங்கியபோது முதலில் இந்த மேருமந்தர புராணத்தை உரையுடன் பூர்த்தியாக வெளிப்படுத்தினால் தமிழ் நாட்டிற்கு இது பெரிதும் பயன்படுமென்று கருதி வீரே. கு. அப்பாசாமி சாஸ்திரியார் அவர்களை இதற்குப் பதவுரை யெழுதும்படி செய்து, வாங்குவோர்க்குக் கஷ்டமில்லாதிருக்கும்பொருட்டு இந்நூலுரையை ஒவ்வொரு சருக்கமாகப் பிரித்துச் சில கனவான்களுடைய பொருளுதவியால் அச்சிடத்தொடங்கி மூன்று சருக்கங்கள்வரை வெளிப்படுத்தினோம். இடையில் நேரிட்ட சில அசந்தர்ப்பங்களால் மற்ற சருக்கங்களும் வெளிவராமல் தடைப்பட்டிருந்தன. அதனால், சென்னை பிரசிடன்சி கலாசாலைத் தத்துவ சாஸ்திர போதகாசிரியராகிய கனம். அ. சக்கரவர்த்தி நயினார் M. A., I. E. S. அவர்கள், 'இது பெரிய கிரந்தமாதலின் விரைவில் இதனை வெளிப்படுத்தல் வேண்டும்; ஆதலின், நீங்கள் வெளிப்படுத்தி யிருக்கும் மூன்று சருக்கங்களையும் என்னிடம் சேர்ப்பித்துவிடின் நான் அவற்றையும் சேர்த்து முழுநூலையும் ஒரே புத்தகமாக வெளியிட்டுத் தமிழ் நாட்டிற்குப் பயன்படச் செய்வேன்' என்று எம்மிடமிருந்த மூன்று சருக்கங்களையும் பெற்றுக்கொண்டு, மற்ற சருக்கங்களுக்கும் ஷை சாஸ்திரியாரவர்களையே உரையெழுதி முடிக்கச்செய்து அவ்வுரையுடன் மேருமந்தரபுராணம் முழுநூலையும் இப்போது அச்சிட்டு வெளிப்படுத்தி யிருக்கின்றார்கள்.

இந்நூல் விஷயத்தில் இவர்கள் எடுத்துக்கொண் டிருக்கும் பிரயாசை தமிழ்நாட்டு ஜைனர்களும், மற்றையரும் பெரிதும் பாராட்டத் தக்கது. இதன் ஆறுவது சருக்கத்தில் பௌத்தமத தரிசனம் நன்கு விளங்குமாறு இவர்களால் சில குறிப்புக்கள் எழுதிச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. முற்பகுதியில் ஆங்கிலமுகவுரை, விஷய அட்டவணை, நூலாசிரியர் வரலாறு, ஜைநசமயம், ஜைந தரிசனத்துக்கும் ஏனைய தரிசனங்கட்கு முள்ள ஒற்றுமை வேற்றுமைகள், சாங்கிய தரிசனம், பதஞ்சலியின் யோகதரிசனம், நியாய தரிசனம், வைசேஷிகமதம், ஜைமினீய தரிசனம், வேதாந்த தரிசனம், பௌத்த தரிசனம், ஜைந தரிசனம், ஸ்ரீ புராணத்திலுள்ள மேருமந்தர புராணம் மணிப்பவளநடை முதலியவைகளும், பிற்பகுதியில் செய்யுள் முதற்குறிப்பகராதி, அரும்பொருள் அபிதான விளக்க அகராதி முதலியனவும் எழுதிச் சேர்க்கப்பட் டிருக்கின்றன. இவை தவிர நூலாரம்பத்திற்கு முன், உரையாசிரியரால் எழுதிய மேருமந்தரபுராண கதைச் சுருக்கமும் சேர்க்கப்பட்டிருக்கின்றது. புத்தகம் சுமார் நூறு பாரங்களுக்குமேல் டிம்மி 8. பேஜ் அளவில் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் புதிய எழுத்துக்களால் அச்சிடப்பட்டுச் சிறந்த கலிகோ பவுண்டும்செய்யப்பட்டிருக்கின்றது. ஜைன மததத்துவங்களையும், காப்பிய லக்ஷணங்களையும் நன்குணர்ந்து கொள்வதற்கு இந்நூலொன்றே போதும். சீவக சிந்தாமணியைப் போல் எல்லா வகுப்பினர்க்கும் பயன் படக்கூடியது இந்நூல். தமிழ்நாட்டு ஜைனர்களுள் இதுவரை எவரும் இத்தகைய பெரிய புத்தக வேலையைப் பூர்த்திபெறச் செய்தவர்கள் இல்லையென்றே உறுதியாகச் சொல்லலாம். ஆதலின், இதன் பதிப்பாசிரிய ரவர்களுக்குத் தமிழுலகம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட் டிருக்கின்றது. இப்புத்தகம் வேண்டியவர்கள் "அ. சக்கரவர்த்தி நயினர் M. A., I. E. S., சென்னை பிரசிடன்சி கலாசாலை தத்துவ சாஸ்திர போதகாசிரியர், தோட்டத்தெரு, இராயப்பேட்டை, சென்னை" என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம். இதன் விலை ரூ. 6 0 0 போஸ்டேஜ் பிரத்தியேகம்.

பத்திராதிபர்.

நாவல்.

இரகஸ்யபுரி மர்மம்.

காலமோமாலை. ஆதவன் தனது தினசரி உத்தியோகத்தைத் தவறாமல் செய்துவிட்டு மேற்குக்கடலில் மூழ்கப்போகிறான். அனந்தகோடி பக்ஷிகளும் தங்கள் தங்கள் இருப்பிடத்தை நாடிச் சப்தித்துக் கொண்டே சென்றன. மிகவும் இனிமையானதென்றல் சுகமாக வீசிற்று.

நவநீத கிருஷ்ணபுரம் என்ற ஊரில் மேற்கு ஓரமாக மற்ற அகங்களினின்றும் சற்று விலகித் தனிமையாய் இருக்கும் ஓர் பங்களாவை நாம் பார்க்கலாம். சுத்தமான வெண்சுண்ணம் பூசப்பெற்ற சுவர்களையுடைய அப்பங்களா தற்காலத்திற் கேற்றவாறு ஓர் அழகிய பூங்காவனத்தினால் சூழப்பட்டிருந்தது. இப்பூங்காவனத்தின் கண்ணே, மல்லிகை, முல்லை, ரோஜா, சாமந்தி, நந்தியாவர்த்தம், பாரிஜாதம், அந்திமந்தாரை, முதலிய புஷ்பங்கள், மாலையானதால், நன்றாய் மலர்ந்து தங்களது இதழ்களை மனோகரமாய் விரித்துத் தங்களிடத்திலுள்ள வாசனையை, அப்பொழுது மிகவும் ரம்மியமாக வீசிக்கொண்டிருக்கும் தென்றலிடத்தில் கொடுத்து 'உலகத்திலுள்ள மற்றைய ஜனங்களுக்கும் இதனைச் சேர்ப்பி' என்று சொல்லுவதுபோல, அத்தென்றலின் மூலம் பரிமளத்தைப் பரப்பிக்கொண்டிருந்தன. இப்பேர்ப்பட்ட அழகான மலர்ச் செடிகளிலுள்ள மலர்கள் முதலியவற்றைப் பிராணிகள்வந்து கெடுக்காதபடி கற்றாழை முதலிய முள்ளுள்ள செடிகளால் வேலியொன்று அமைக்கப்பட்டிருந்தது.

அப்பங்களாவின் கண்ணிருந்து மிகவும் அழகான மங்கைப் பருவமுள்ள பெண் ஒருத்தி அந்நந்தவனத்திற்குள் தனது மெல்லிய பதத்தை மெல்லெனவைத்து, அந்நந்தவனத்தின் அழகைக் கண்டு களிப்பதற்காக அன்னநடை நடந்துவந்தாள். இப்பெண்ணினது அழகை நாம் இங்குச்சற்று விவரிப்போம். இவள் இருபத்தைந்து வயதுள்ளமாது. இவளுடைய முகாரவிந்தம், லக்ஷிமி நர்த்தனம் செய்வதுபோல், பிரகாசமாய் இரவில் வானத்தில் தனியரசாளும் பூர்ணச் சந்திரனையும் பழிக்கும் காந்தியுடையதாய்க் கண்டவர்மனதைக் கவரும் தன்மையுள்ளதாய் விளங்கிற்று. கூந்தல் மேகம்போற் கரியநிற முடையதாய் முழங்காலளவு நீண்டுள்ளது.

அப்பேர்ப்பட்ட கூந்தலைத் தற்காலத்திற் கேற்றவாறு அவள் சடை பின்னி—முனை 'ரோஸ் நாடாவால் பிணைக்கப்பட்ட பின்னல்—'எஸ் கட்டு' கட்டியிருந்தாள். அவளுடைய புருவங்கள் வில்லை யொத்தன வாய், கருமையாய், மிகவும் அழகாயமைந்திருந்தன. கண்களோ, மிகப் பெரியனவாயில்லாமலும், மிகச்சிறியனவாயில்லாமலும் சாதாரணமாய் ஆடவர்களின் அறிவை மயங்கச்செய்யும் ஜோதியுள்ளன வா யிருந்தன. அவளுடைய வதனத்தில் கோவைப் பழம்போல் சிவப்புநிறமான உதடுகள் தோன்றின. அவள் எப்பொழுதும் மலர்ந்த முகமுடையவள். தாமரை மலர்போன்ற முகத்தைத்தாங்கும் அன்னவளுடைய கண்டமானது மெல்லியதா யிருந்ததால் தாமரை மலரைத் தாங்கும் தண்டைப்போன்றிருந்தது. அவளுடைய இடை மின்னலைப்போல் நன்கு விளங்கிற்று. அவள் பச்சை மேகவர்ணப் புடவையொன்றை நாகரீகமா யுடுத்தி யிருந்தாள். இருகரங்களிலும் பத்தரைமாற்றுத் தங்கத்தினு லாக்கப்பெற்ற காப்புக்களிட்டிருந்தாள். கழுத்தில் கண்டசரம், கெடியாரச் சங்கிலி, காசுமாலை முதலிய ஆபரணங்கள் பூண்டிருந்தாள். காதுகளில் மிகவும் பிரகாசமாயுள்ள இரண்டு வைரத்தோடுகள் அணிந்திருந்தாள். இந்த விதமாக இன்னவள் அரம்பை ஊர்வசி முதலியவர்களைப் பழிக்கும் அழகினையுடையவளாய் அந்நந்தவனத்தூடே நடந்து அழகான புட்பங்களின் அழகைக் காண்டானந்தித்துக் கொண்டிருந்தாள்.

நாம் முன்னமே அறிவித்தபடி, ஆதவன் மேற்குக் கடலில் மூழ்க ஆரம்பித்தவன் மறைந்து விட்டான். இருளும் கொஞ்சம் கொஞ்சமாக இப்பூவுலகைக் கவிந்துகொள்ள வாரம்பித்தது. அச்சமயத்தில் அந்நந்தவனத்தின் வேலியில் சலசலவென்ற சப்தம் கேட்டது. அம்புஜவல்லி—இந்தப் பெண்ணின் நாமதேயம் இது தான்—அஃதென்னவென்று திரும்பிப் பார்ப்பதற்குள் இரண்டு தடியர்கள் திடீரெனப் பாய்ந்து அன்னவள் கண்ணையிறுகக்கட்டி, வாயில் துணியையடைத்து அவளைத் தூக்கிக்கொண்டு நொடிப் பொழுதுக்குள் மரமடர்ந்த காட்டினூடே வெகு விரைவாகச் சென்றார்கள். அம்புஜவல்லியோ சுவாசம் சரியாய் விட முடியாததாலும் அத்தடியர்களின் பயங்கரமான தோற்றத்தை முதலில் கண்ணுற்ற போதுண்டான பீதியாலும் மூர்ச்சையாகி விட்டாள்.

சகோதரர்களே! சகோதரிகளே! சற்று நாம் அந்த அம்புஜவல்லி யார் என்று கவனிப்போம். இன்னவள் திருவாங்கூர் ராஜ்யத்திலுள்ள தனபாலன் என்னும் பெரிய கனவானின் மகள். ஆனால்

இவளுடைய தாய் தந்தையர்கள் இவளுடைய இளம் பிராயத்திலே தேக வியோக மடைந்தார்கள். தனபாலன் தான் மரணத்தறுவாயிலிருக்கும்பொழுது, அன்பார்ந்த நண்பர்களாவது, சுற்றத்தாராவது இல்லாததினால், தனது உண்மையுள்ள, காலில் நகம் முளைத்த நாள் முதலாய்த் தன்னிடத்திலே வேலை பார்த்து வந்த அநங்கன் என்பவனிடத்தில் சிறு குழந்தையாகிய அம்புஜவல்லியை யொப்புவித்துப் பின்வருமாறு சொன்னான்:

"அப்பா அநங்கா! உன்னைப்போல் உண்மையான வேலையாளை நான் இதுவரை பார்த்ததுமில்லை கேட்டதுமில்லை. நானோ இப்பொழுது இவ்வுலக வாழ்க்கையைத் துறக்கப் போகிறேன்; எனது பத்தினியோ எனக்கு முன் உயிர் துறந்துவிட்டாள். எனது ஏக புத்திரியான அம்புஜம்—ஐயோ! நினைக்கும்பொழுது மனம் பொறுக்கவில்லையே—உற்றார் பெற்றாரில்லாமல் அநாதையாய் விடுவாள். ஆகையால் அநங்கா! நீ தயவுசெய்து அம்புஜத்தை—எனது அன்பார்ந்த அம்புஜத்தை—உனது சொந்தக் குழந்தைபோலப் பாவித்து அன்புடன் வளர்த்து வந்து பிராயம் வந்தவுடன் (ஓர் லிகிதத்தைக் கொடுத்து) இந்த லிகிதத்தை அவளிடம் நீ ஒப்புவிகக வேண்டியது. இது தான் நீ எனக்குச் செய்யவேண்டிய பேருதவி." என்று சொல்லி இவ்வளவு தூரம் பேசிய களைப்பினால் தனது படுக்கையில் சாய்ந்து விட்டான். அவ்வாறுகளைப் படைந்த தனபாலன் மறுநாள் விண்ணுலகடைந்தான். அவனுடைய அந்தஸ்திற் கேற்றவாறு உத்திர கிரியைகள் யாவும் நடைபெற்றன. இச்சம்பவங்கள் நமது அம்புஜவல்லிக்கு ஞாபகமில்லை. ஏனெனில் அவள் அப்பொழுது மூன்று வயது நிறைபப் பெறாத சிசு. அநங்கனும் தான் உண்ட வீட்டிற்கு இரண்டகம் புரியாதபடி தன் எஜமான் மரணத்தறுவாயில்விட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு அம்புஜவல்லியை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துக் கண்ணை இமைகாப்பது போலக்காத்து வந்தான். மேலும் தன் எஜமானன் தந்த லிகிதத்தை உடையாமல் பத்திரமாய் வைத்திருந்தான்.

(தொடரும்)

P. N. Sankaranarayanayyar,
Son of
P. S. Narayanaswami Ayyar Avl.,
Pananjady.

அழகுள்ளவை! விலை சகாயம்!!

இமிடேஷன் புது மாதிரியான துப்பட்டாக்கள்.

இந்த துப்பட்டாக்கள் நல்ல பட்டு நூலினால் நெசவுசெய்யப் பட்டுள்ள குலாபி, பச்சை, புளூ, வெள்ளை 5 முழ நீளம் மூன்று முழ அகலம் உள்ளவை. துப்பட்டா 1-க்கு ரூ. 3 12 0

ஆதிலட்சுமி சில்க் அவுஸ்,
பாலகிருஷ்ணன் லேன், ஜி. டி. சென்னை.

தருமசீலன் பிரஸ் விளம்பரம்.

நமது தருமசீலன் அச்சுக்கூடத்தில் தமிழிலும், இங்கிலீஷி லும், சகாயமான சார்ஜில் அச்சுவேலைகள் வெகுசுத்தமாகச்செய்து கொடுக்கப்படும். வெளியூரிலிருந்து, நம் ஆபீஸில் அச்சுவேலைகள் செய்துகொள்ளப் பிரியமுள்ளவர்கள், அச்சிடவேண்டியகாப்பிகளை நமக்கனுப்பி, பாரம் ஒன்றுக்கு ஒருரூபா விகிதம் புரூப் சார்ஜும் கொடுத்தால் அவ்வேலைகளை நாமே புரூப்பார்த்து முடித்துக்கொடுப் போம்.

மானேஜர்,
தருமசீலன் பிரஸ்,
½ பாலகிருஷ்ணன் சந்து,
ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை.

இனாம்! "கிலாபத்" இனாம்!! இனாம்!!

இஸ்லாம் மார்க்க உண்மைகளையும் ராஜீய தேசீய விஷயங்களை யும் தன்னுட்கொண்டு, ராயல் 8-பக்கங்கொண்ட பெரிய ஸைஸில் ஒவ்வொரு சஞ்சிகையும் 48-பக்கங்களுடன் நல்ல உயர்தர கிளேஸ் காகிதத்தில் மிக நேர்த்தியாகச் செந்தமிழில் அச்சிடப்பட்டு ஒவ் வொரு மாதம் முதல் தேதியிலும் வெளியாகும் "தாருல் இஸ்லாம்" என்னும் மாதப் பத்திரிகைக்கு 1923-ல் சந்தாதாரராகச் சேரும் ஒவ்வொரு புதிய நண்பருக்கும் ஒவ்வொரு கிலாபத் புத்தகம் இனா மாகக் கொடுக்கப்படும். கொஞ்சம் பிரதிகளேயிருக்கின்றன. முந் துங்கள்! முந்துங்கள்.

வருஷ சந்தா ரூ 3-0-0. அயல்நாடுகளுக்கு ரூ 4-0-0.

"தத்துவ இஸ்லாம்" நான்காம் கமலம் 480-பக்கங் கொண்ட பைண்டு புத்தகம் விலை ரூ. 3—0—0.

"தாருல் இஸ்லாம்" ஆபீஸ்,
16, 17. லக்கின்டுலேன் பீச், மதராஸ்.

சுகானந்த

அயத்தங்க திராவகம்.

அனுபவமானது! பிரசித்தி பெற்றது!! சஞ்சீவி போன்றது!!!

இதன் முக்கிய குணங்களாவன:—

இது வாக்கையும் ஆகையையும் பலப்படுத்தும். துர்ப்பலப்பட்டவர்களின் தோழனும் ஊன்றுகோலுமாம். பலம் குறைந்து ஆதர

வற்றவர்களுக்கு அன்பான நண்பன். நவரத்தினங்களைப்போல் உபயோகப்படும் அருமையான நவநீதம். இரைப்பை, ஈரல், தலைமூளை, நீர்ப்பை ஆகியவைகளைப் பலப்படுத்தி, அவைகளைச் சீர்ப்படுத்தி உற்சாகப் படுத்தும் அற்புத ஔஷதம். இது பெரும்பான்மையும் இரத்தத்தை உண்டாக்கி, அதனை விருத்தி செய்வதில் மிகவும் சிறந்தது. இரத்த மில்லாமல் தேகத்தை வெண்மை நிறமாக்குகின்ற பாண்டு சோகை, காமாலை, சுரக்கட்டி, முதலிய ரோகங்களைக் குணப்படுத்துவதில் இது முதன்மை பெற்றது. சில செந்தூரங்கள், பஸ்பங்கள், சூரணங்கள் முதலியவைகள் இரைப்பை, சிறுகுடல் ஆகியவைகளில் தங்கி நின்று அவைகளைக் கெடுப்பதுபோல் கெடுக்காமல் அங்கு சென்ற தக்ஷணமே சீரணமாகி அங்குள்ள தோஷத்தை நீக்குவதில் இது பெயர் பெற்றது. இது சித்தர் மூலிகைகளின் சத்துக்கள் சம்பந்தமாகச் செய்யப்படுவதால் அதிக உன்னதமானது. தளர்ந்த நரம்புகளைப் பலப்படுத்தி உற்சாகத்தைக் கொடுத்து முறுக்கேற்றி ஸ்திரப்படுத்தும் அற்புத சஞ்சீவியிது. இது அதிமூத்திர ரோகத்தை அறவே நீக்கும். நாள்பட்ட பேதிகளை கிரமேணுவாகக் கட்டுப்படுத்திச் சுபாவபலத்தை யுண்டாக்கும். இது நடப்பதாலும், படிகள்மீது ஏறுவதாலும், பேசுவதினாலு முண்டாகும் ஆயாசம், இளைப்பு, களைப்பு, கஷ்டசுவாசம் முதலியவைகளை நீக்கிச் சுவாசப்பையைச் சீர்ப்படுத்தி, பலப்படுத்திச் சுபாவகுணத்தை யுண்டாக்கும். இது பால் நெய் முதலிய வஸ்துக்களை சீரணப் படுத்துவதில் மிகவும் கீர்த்திபெற்றது. இது ஏழைகளுக்கும் உபயோகப்படும்படியாகக் குறைந்த விலை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

20 நாள் மருந்து ரூ. 1 4 0   40 நாள் மருந்து ரூ. 2 0 0

தர்மசீலன் பிரஸ்,

மண்ணடி போஸ்டு, மதராஸ்.